பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 05 புதன்கிழமை (21-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily இதழ் 328

எல்லைப்புற தாக்குதல்களை தடுப்பதற்கு புதிய திட்டமாம்!

ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

கொழும்பு, அக்டோபர் 21

"தீவிரவாதிகளின் உபாயங்களை கவனத்தில் எடுத்து, எல்லைப் புறக்கிராமங்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து அங்கு வாழும் மக்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன."

– ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

நேற்று மாலை ஹிங்குரா கொடையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். அவர் அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது :-

பொன்னறுவையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்கள் போன்றவை மீண்டும் நிகழாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

இத்தகைய படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும், அத்திரமடையாமல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அமைதி காத்த மக்களை நான் பாராட்டுகிறேன்.

எச்சரிக்கையோடு. பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் தலைவர் [6 ஆம் பக்கம் பார்க்க]

வவுனியா நகருக்கு வெளியே வர ஆஸி. பிரதி தூதுவருக்கு படையினர் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 21

வவுனியாவுக்குக் கடந்த சனிக்கிழமை விஜயம் செய்திருந்த ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மட்டுமே பார்வையிட அனுமதிக்கப்பட்டார்.

ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளது கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளை— வவுனியா நகருக்கு வெளியே உள்ள பகுதிகளை — பார்வையிட பிரதித்தூதுவரை அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா இராணுவ இணைப்பதிகாரி, மற்றும் அரச அதிகாரிகளுடன் பிரதித் தூதுவர் பேச்சு நடத்தினார்.

வவுனியாவுக்கு வெளியே சமூகசேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் அமைப்புக்களை அவர் சந்திக்க விரும்பியதாகவும்—

ஆனால் படையினர் அதற்கு அனுமதிக்கவில்லை என்றும் — அறியவந்தது.

(அ-3)

நேபாளத்திலும் புலிகளாம்! இந்தியா கவலை தெரிவிப்பு

காத்மண்டு, அக். 21

பஞ்சாப், காஷ்மீர் தீவிரவாதிகளும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நேபாளத்தில் பதுங்கியிருந்து இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்களாம்!

இது குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை நேபாளத்திற்குத் தெரிவித்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவுக்கும், நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராளாவுக்கும் இடையே நடந்த சந்திப்பின் போதே இந்தியத் தரப்பில் இந்த விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேபாளம் சென்றிருக்கும் இந்தியப் பிரதமர் நேபாள பிரதமருடன் விரிவான பேச்சுக் [6 ஆம் பக்கம் பார்க்க]

வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், அக். 21

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வயிற்றோட்ட நோய் வேகமாய் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது

சிறுவர்களும், குழந்தைகளுமே இந்த நோயினால் பெரிதும் பீடிக்கப்பட்டு வருகின்றனர். அதற்கு முகாம்களில் இந்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

இவ் வாரத்தில் தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்டத்தினால் ஒரு குழந்தையே பலியாகின. யாழ். குடாநாட்டிலும் பெருமளவான சிறுவர்கள் சிகிச்சைக் [6 ஆம் பக்கம் பார்க்க]

வீதியெங்கும் மரம் நடுவோம்
விழி போலக் காத்திடுவோம்

"கறுப்பு வெள்ளி" தினமன்று எம். பிக்களும் பகிஷ்கரிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்தீபு

கொழும்பு, அக். 21

கொலன்னறுவ படுகொலைகளைக் கண்டித்து நாளை மறுதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கும் உத்தேச "கறுப்பு வெள்ளி" தினத்தை ஒட்டி அன்றையதினம் நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்துவது என்றும்—

நாடாளுமன்றக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படி அனைத்து எம். பிக்களையும் கோருவது என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றம் இன்று [புதன்] கூடுகிறது. அப்போது, நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படி எம். பிக்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அழைப்பு விடுப்பார். [6 ஆம் பக்கம் பார்க்க]

முஸ்லிம்கள் படுகொலை: பல்கலை, மாணவர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, அக். 21

கொலன்னறுவையில் முஸ்லிம் இராணுவ இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

சுமார் ஐநூறு மாணவர்கள் வரை இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.

முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு ஜனாதிபதி பிரேமதாஸாவும் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுமே காரணம் என்று குற்றஞ்சாட்டி, இவர்களுடைய உருவப்படங்களை பல்கலைக் கழக மாணவர்கள் எரித்தனர் என்றும் ஏ.எவ் பி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

அடிப்படை உரிமைமீறல்மனு இந்த ஆண்டில் சாதனை!

கொழும்பு, அக். 21

இந்த ஆண்டில் இதுவரை உயர் நீதிமன்றத்தில் 801 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் எம். ஏ. சிறில் இத் தகவலைத் தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் — குறைந்தது 650 வரையானவை — நாட்டின் பல பகுதிகளில் உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

தினமும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. சில தினங்களில் 25 மனுக்கள் வரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

1985 தொடக்கம் தாக்கல் செய்யப்பட்டு வரும் அடிப்படை மனித உரிமை மனுக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த [6 ஆம் பக்கம் பார்க்க]

கிளாலி கடற்பகுதியில் படையினர் தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு கிளாலி — ஆலங்கேணி கடற்பகுதியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் கண்மூடித்தனமான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

இரவு 8 மணி முதல் 10 வரை நடைபெற்ற இத்தாக்குதல்களினால் இப்பகுதி ஊடான படகுப் போக்குவரத்து வெகுவும் பாதிக்கப் பட்டது.

படையினரின் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து விரிவான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. [உ-126-10]

அச்சுவேலி ம. வி. நூற்றாண்டுவிழா

அச்சுவேலி, அக். 21

அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை 21 ஆம் திகதி நடைபெறுகின்றது.

வித்தியாலய அதிபர் திரு: எஸ். செல்லையா தலைமையில் நடைபெறும் நூற்றாண்டு விழாநிகழ்ச்சியில்கல்விப்பணிப் பாளர் திரு. இ. சுந்தரவிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் திரு. எஸ். பாலசிருஷ்ணன், தமிழீழவிடுதலைப் புலிகள் கல்வி விடய இணைப்பாளர் திரு. க. அருண்மாஸ்டர். அச்சுவேலிப் பொறுப்பாளர் திரு. க. நோம், வண. பிதா டி. எஸ். நியாகராசா, அருட்திரு வி. எஸ். தேவராஜன் [6 ஆம் பக்கம் பார்க்க]

9 லட்சம் சிறுவருக்கு நித்திரை இல்லை

வத்திக்கான், அக். 21

வரும் சனிக்கிழமை நடைபெற்று வரும் யூகோஸ்லேவியக் குடியரசான பொஸ்னியாவில் வெடிகுண்டு அதிர்வுகளினால் ஒன்பது லட்சம் குழந்தைகள் தூக்கமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

'யுனிசெப்' நிறுவனம் வெளியிட்ட தகவல்களை மேற்கோள் காட்டி வத்திக்கான் வானொலி இத் தகவலை அறிவித்தது. [உ-10]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனத்தில்

G. A. Q. 1st in Com.

கல்வி சற்ற மாணவர்களுக்கான

விசேட அறிவித்தல்

B. A. Part - 1

B. Com. Part - 1

விரிவுரைகள்: 01 — 11 — 1992
(காலை 10 மணி)

ஆரம்பமாகின்றன என்பதை அறியத்தருகிறோம்.

★ ஏனைய மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

நிர்வாகி;
எஸ். அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(கி/3712)

கொக்குவில் இந்துக் கல்லூரி

பரிசளிப்பு விழா - 1992

நேரம்: காலை 9 30 மணி
காலம்: 22—10—1992 வியாழன்
இடம்: பிரதான மண்டபம்
பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
(வடமாநில கல்விப பணிப்பாளர்)
பரிசில் வழங்கல்:
திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்; தயவு செய்து இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளவும்;

நன்றி:
அதிபர். ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(கி-3495)

கண்ணீர் அஞ்சலி

திருமதி அன்னலச்சுமி செல்வராசா
(தொழில் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

இருபது ஆண்டுகளாக எமது திணைக்களத்தில் கடமையாற்றி 19-10-92 இல் சிவபதமடைந்துவிட்டார்; இறுதிக்கிரியைகள் 21 10-92ல் நடைபெறும். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்;

தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

(5505)



3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
சத்தியரூபா குணநாயகம்
திதி: 21 — 10 — 1992

என் மகளே! மணி விளக்கே! என் உயிரே!
எனைவிட்டு ஏனகன்றாய், எரிதணலாய்!
உடன்பிறந்தோர் உளம்வேக, உன்நினைவால்
ஈன்றெடுத்த என் வயிறு, ஈறீராய்
இனம் புரியா வேதனையால் வேகுதன்றோ!
இன்றோடு மூன்றாண்டா? முடியவில்லை நம்புதற்கு,
கனவினிலும் உன்முகத்தைக் காண்பதற்கும் விதியில்லை
கண்மணியே வாராயோ! காலனே அருளாயோ!

தாய், கணவன், சகோதரங்கள்,
உறவினர்கள்.

46/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.

(22972)

இன்று

யாழ்ப்பாணம், அக். 21

நாரந்தனை மத்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தை மீள இயக்குவதற்கான ஆரம்பக் கூட்டம் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பணிமனையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (உ)

★ ★ ★

வடமராட்சி, அக். 21

எழுத்தாளர்கள், கலைஞர்களுடனான சந்திப்பு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தின் மேஜர் மேகன் கலைக் கூடத்தில் வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-165)

★ ★ ★

யாழ்: மாநகர சபையின் நாயன்மார்கட்டு அரியாலை மேற்கு ஆகிய பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் இன்று மாலை 4 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றன.

யமுனா வீதி, அரியாலை கிழக்கு பகுதிகளுக்கான குடிதண்ணீர் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே; (உ-3)

மாதாந்த உதவிப் பணம்

கன்னாகம் தபாலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் மீண்டும் சுன்னாகம் தபாலகத்திலும், அதன் கீழ் இயங்கும் உபதபாலகங்களிலும் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. (த-89)

இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 21

யாழ். கல்வித் திணைக்களம் யாழ்; மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நான்கு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

ஹாட்லியில்

பருத்தித்துறை ஹாட்லி மைதானத்தில் நடைபெறும் 19 வயதுப் பிரிவு ஆட்டத்தில் உடுப்பிட்டி அ. மி. த. பாடசாலை அணியை எதிர்த்து உரும்பராய் இந்து அணி மோதும்.

17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் நாவாந்துறை றோ. க. அணியை எதிர்த்து நெல்லியடி ம. ம; வி. அணி மோதும்;

மட்டுவிலில்

இன்று மாலை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறும் 17 வயதுப் பிரிவு ஆட்டம் ஒன்றில் புனித சார்ள்ஸ் அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணி மோதும்;

அங்கு நடைபெறும் 19 வயதுப் பிரிவு ஆட்டத்தில் வரணி ம. வி; அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும். (உ)

நினைவு தினம்

யாழ்ப்பாணம்; அக். 21

இந்திய அமைதிப்படையால் யாழ். ஆஸ்பத்திரிக்குள் வைத்து டாக்டர்கள், தாதியர், சிற்றூழியர்கள் உட்பட 21 பேரும் 55 க்கு மேற்பட்ட நோயாளரும் படுகொலை செய்யப்பட்டதின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்;

21 ஊழியரின் ஞாபகார்த்தமாக இன்றும் நாளையும் யாழ். ஆஸ்பத்திரியில் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (உ-15)

யாழ். நகரில்

★ ஐஸ்கிறீம் வகைகள்
★ குளிர்பான வகைகள்
★ சிற்றுண்டி வகைகள்
மற்றும் பிறந்த தினம், திருமணம், களியாட்ட வைபவங்களுக்கான
★ கேக் வகைகளுக்கும்

தரமானதும், சுவையானதுமான தயாரிப்புகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி/3719)

கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் செயல்படுத்தப்படும் விவசாயிகள் ஓய்வூதியச் சமூகப் பாதுகாப்பு நலன்திட்டம்

இலங்கை வாழ் விவசாயப் பெருமக்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

★ 18 வயது முதல் 59 வயதினர் வரையான விவசாயத்தில் முழுநேரமாகப் பாடுபடும் (விவசாயத் தொழிலாளர் உட்பட) அனைவரும் இத்திட்டத்தில் சேரலாம்.
★ 45 — 59 வயதிற்கிடைப்பட்டவர்கள் இத்திட்டத்தில் 31-12-1992இற்குப் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்;
★ 60 வயது பூர்த்தியானவுடன் தமது மாதாந்த ஓய்வூதியத்தை அண்மையிலுள்ள தபால் அலுவலகத்தில் தொடர்ந்து பெற்றுக்கொள்ளலாம்.
★ உறுப்பினருக்கு ஏற்படக்கூடிய பூரண அல்லது ஓரளவு இயலாமையின் போதும் மரணம் போன்ற துன்பியல் நிகழ்வுகளின் போதும் பணிக்கொடை வழங்கப்படும்;
★ உறுப்பினர் ஒருவர் முழுத் தவணைப் பணத்தையும் ஒரே தடவையிற் செலுத்தும் போது அவரவர் வயதிற்கேற்ப 50% முதல் 14.5% வரையிலான கழிவு வழங்கப்படும்.
★ இத்துடன் பனை அபிவிருத்திச் சபையினர் விடுத்த வேண்டுகோளையடுத்து, பகுதி நேரமாக விவசாயத்தில் ஈடுபடும் சீவல் தொழிலாளர்களும் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயி ஒருவரின் நலன்கள் பாதிக்கப்படும்போது பணிக்கொடை நலன்கள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன.

சம்பவத் தேதியில் வயது	பூரண இயலாமை நலன் (ரூபா)	ஓரளவு இயலாமை நலன் (ரூபா)	மரண நன்கொடை (ரூபா)
18 — 30	50,000.00	25,000.00	25,000.00
31 — 35	40,000.00	20,000.00	20,000.00
36 — 40	30,000.00	15,000.00	15,000.00
41 — 45	20,000.00	10,000.00	10,000.00
46 — 60	12,000.00	6,000.00	6,000.00

மேலதிக விவரங்களுக்கு:

உங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தை, அல்லது அண்மையிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கிக் கிளையை, அல்லது நல்லூர் கமநல சேவைகள் நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டக் கமத்தொழில் காப்புறுதிச் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உதவிப் பணிப்பாளர்,
கமத்தொழில் காப்புறுதிச் சபை,
கமநலச் சேவைகள் நிலையக் கட்டிடம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C/3603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி மகா வித்தியாலய

★ நூற்றாண்டு விழா சிறப்பிதழ் ★

1892 1992

சான்றோரை தரணிக்குத் தந்த அச்சுவேலி மகாவித்தியாலயம்

எமது பாடசாலை அதன் நூற்றாண்டு நிறைவை இவ் வாண்டு கொண்டாடுகின்றது. அது கடந்த காலச் சிறப்புக் களையும், பெருமைகளையும் நினைத்தேகொண்டாடுவதோடு எதிர் காலத்திலே பல வளர்ச்சிப் படிகளை எய்தி நிற்கின் றது. கல்விச் சமூகத்தின் சான்றோர் பலரும் பலவகை வளங்களும் பாங்குடன் கூடிய வேண்டுமெனப் பாராட்டி நிற்கின்றனர்.

இம்மகாவித்தியாலயம் அச்சுவேலி நகரில் மத்தியமாக எழுந்து நிற்கும் கல்விச் சாலை என்ற பெயர் படைத் தது. கல்விச் சமூகத்தின் கணிசமான மிக்க அதிபர் களின் வகுத்தலத்தில் திகழ்ந்த தது. நல்லாசிரியர்களின் நற் சேவையால் நாவிலத்தில் போற்றுதல் பெற்றது. சான் றோர் பலரை இத்தரணிக் குத் தந்தது. ஆற்றலுடன் உயர்வது உழைக்கும் போற்று தற்குரிய மனை மாணவர் களைப் பெற்றது.

அத்துடன் நிறைவே கல்வி யில் சிரசான பெருமையும் பெற் றதற்குரிய பெற்றோரைக் கொண்டது. நலமுடன் நற் பெயர் நாட்டினில் சேர்த்திட நாட்டமுடன் உழைக்கும் நலன் விரும்பிகளைப் பெற் றது. அதன் வளர்ச்சிப்பாதை நீண்டது.

வளர்ச்சிப் பாதையில்

ஈழத்துக் கல்விப் பாரம்பரி யத்தில் திண்ணைப்பள்ளி களைக் குறிப்பிடத்தக்கவை. அத் தகைய பாரம்பரியம் அச்சு வேலி கிராமத்திற்கும் உண்டு. அத்தகைய வளர்ச்சிப்பாதை யில் ஐரோப்பியரின் வருகை அரவணைப்பாக மாறியது. அமெரிக்கன் மிசனறிக் கல்வி நாட்டுக்கு அளித்த நற்பலன் களால் விளைந்தது. ஆரம் பக்கல்வியும், உயர்தரக் கல்வி யும் தாராளமாகத் தனியே வளர்ந்ததுமதற் கல்வியின் மகத்துவம் சேர்க் கிறிஸ்தவக் கல்லூரி என்று மினிர்ந்தது.

ஆரம்ப நிலையும், உயர் நிலையும் ஒன்றாய் இணைந்து மகாவித்தியா லயம் என்ற பெயர் தாங் கியது. காலத்தே போற்றும் வளர்ச்சி பெற்றுக் கல்விச் சாலையாகத் திகழ்கின்றது. ஆரம்பக் கல்வி முதல் உயர் தரக் கலை, வர்த்தக வகுப் புக்களைக் கொண்ட பாட சாலையாக வளர்ச்சியடைந் துள்ளது.

பாடசாலை அமைப்பு முறைகளின் மாற்றத்திற் கேற்ப அச்சுவேலித் தொகுதி மூலாதாரப் பாடசாலை என்ற நிலையைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின் றது.

மாண்புமிகு பாடசாலை

மருதனார்மடம் கல்வித் தொகுதிற்கு மாண்புமிகு பாடசாலைகளில் ஒன்றாக மிளிருகின்றது. கற்றல், கற் பித்தல் நிகழ்வுகளில் போற் றத்தகு வெறுவேறுகளைப் பெற்று விளங்குகின்றது; தொகுதி, கோட்டம், மாவட்டம் போன்ற பல்வேறு நிலைகளிலும் தன் முத்திரை யைப் பொறித்துள்ளது. மாண் பைப் பெறுவதோடு இவை பாடசாலை செயற்பாடுகள் என்பதற்கு அப்பாலும் நின்று நிலவும் கல்விச் சேவையாக வும் திகழ்கின்றது.

வளமான கல்விக்கு வித்திட்ட பாடசாலை

இருள் கவிந்த தமிழன் வாழ்வில் ஒளி பிறப்பதை புன் காங்கிதம் அடையச் செய்கின்றோம். அச்சுவேலி மகாவித் தியாலயம் தன் நூற்றாண்டு நிறைவையொட்டி விழா எடுப் பது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

இந்நாட்டின் நிர்நிலைத்தில் இறங்கிய அமெரிக்கர்கள் ஆற் றிய தொண்டின் கல்விச் இன்னங்களுள் இம்மகாவித்தியாலய மும் ஒன்றாகும்.

சான்றோர் பலர் வாழும் மருதமும் நெய்தலும் குன் றிய வனாந்தரத்தில் "வேடிக் விழுச் செல்வக் கல்வி" என்பதை உணர்ந்து கல்வேபோற் காத்த கலையகம் ஒளி வீசத் தானே வேண்டும்.

நூற்றாண்டு சேவையால் நுண்ணான்றளபுலப் பேரான் மையால் நீண்டு நெடிதுயர்ந்த இக்கலைக்கோயில் அச்சுதப் மாய் ஒளி வீசட்டும்.

"வீடுதோறும் கலையின் விளக்கம், வீதி முற்றிலும் பலு பல, பள்ளி" என்ற பாரதியின் கூற்று நிதர்சனமாக எம்மக்கள் நியாக உள்ளங்களில் படவே கல்விச்சேவையால் என்றும் நின்று நிலவும் கல்விச் சோலைகளைக் கல்விப்பணிப் பாளர் என்ற முறையில் அகக்கண்ணில் நிழலாடச் செய்ய முடிகின்றது.

அந்த வகையில் நூற்றாண்டுப் பெருமையும் பல அதிபர் களின் வகுத்தலத்தில் தவழ்ந்த பெருமையும் மிக்க அச்சுவேலி மகாவித்தியாலயம் எனது போற்றுதலுக்கும், பாராட்டுதலுக் கும் உரித்த கல்விச்சாலையாகும்.

"நீரில்லா நெற்றி பாழ்" என்ற தொடரில் "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்று வரும் சொற்றொடருக்கமைய ஏடில்லா ஊருக்கு எழில்மிகு கல்வியில்லையே என்பதனை உணர்ந்த புலவர் பெருமகன் நம்பிமுதற் கவர்கள் சங் மார்க்க ஜோதினையைத் தந்த கல்விப்புலத்தைச் செழிப்படை யச் செய்தார்.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்ற னைத்தூறும் அறிவு" என்ற வான்புகழ் வள்ளுவர் வாக்கு இம்மண்ணில் வாழ் தமிழ் மக்களுக்கு சாலப் பொருந்துவ தாகும்.

அச்சுவேலி மகாவித்தியாலயம் மேலும் மேலும் செல்வக் கல்வி, மாடல்ல மற்றவை என்ற கருத்தை அச்ச மில்லா இள உள்ளங்களில் நிலை நிறுத்திச் சான்றோர் பலரை இம்மண்ணிற்குத் தந்து வளமான கல்வியுலகை தோற்றுவிப்பதாக, அதன் வெளிச்சம் ஒளிமயமான எதிர் காலத்தை உம் மண்ணோர்க்கு உரித்தளிப்பதாக.

இ. சுந்தரலிங்கம்,
கல்விப் பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

இதழ் அமைப்பு
அச்சுவேலி செய்தியாளர்
ஞான ஆதவன்

கி. செல்லையா B. A.(Dip- in Ed)
தொகுதி அதிபர், அச்சுவேலி மகாவித்தியாலயம்

கல்விச்செல்வம் வழங்கி நூற்றாண்டு சாதனை

அச்சுவேலி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழா கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு பாடசாலை நூறு ஆண்டுகளாக எமது மக்களுக்கு கல்விச் செல்வத்தை தொடர்ச்சியாக வழங்கி இன்று ஒரு கல் லூரியாக வளர்ந்துள்ளது. இது ஒரு சாதனை என்றே கூற வேண்டும்.

தென் இந்திய திருச்சபையால் 1892 இல் ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்த பெரியோர் களை இத்தருணத்தில் நினைவு கருதல் பொருத்தமாகும். இக்கல்லூரியில் கற்றுயர்ந்த பல பெரியோர்கள் இன்று அச்சுவேலி கிராமத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்து வருகிறார்கள். இக் கிராமத்திற்கு பல நற்பிரசைகளை இக் கல்லூரி உருவாக்கித் தந்துள்ளது.

இக் கல்லூரி வளர்த்த மக்களே இக்கல்லூரியை மேலும் வளர்க்க முன் வந்திருப்பது விரும்பத்தக்கது. இதன் ஒரு படி நிலையாக அவர்கள் நூற்றாண்டு விழா கொண்டாடுகின் றனர்.

நன்றிக் கடன் மறவாது இக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை ஒழுங்கு செய்து நடத்தும் அதிபர், ஆசிரியர் பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இக்கல்லூரி தொடர்ந்தும் வளர்ச்சி பெற்று எமது மக்களுக்கு நிறைவான கல்வியை வழங்கவேண்டுமென வாழ்த்து கிறேன்.

இ. இவானந்தன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
மருதனார்மடம்.

நூற்றாண்டு விழாக் காணும்
அச்சுவேலி மகா வித்தியாலயம்
பல கல்விமான்களையும் அறிஞர்களையும்
தமிழீழ மண்ணுக்கு உருவாக்கித்தந்து உயர்ந்து நிற்க
வாழ்த்துகின்றோம்

வலி-கிழக்கு வடபகுதி தெங்கு - பனம் பொருள்கள்
உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி.

சுவையுடன் சுகாதார முறைப்படி தயாரான
★ பனம் சீனி ★ பனம் வெல்லம் ★ கல்லாக்கரம்
★ பனாட்டு ★ பனம் பாணி முதலியவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

கல்விப்பணி பல புரிந்து நூற்றாண்டு விழாக்காணும்
அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் பணி தொடர
வாழ்த்துகின்றோம்

வலி-கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்
அச்சுவேலி.

● மொத்த விற்பனை நிலையங்கள்:
புடவை நிலையம், எரிபொருள் நிலையம், இரும்பு நிலையம்,
கிறகு நிலையம், பாண் உற்பத்தி நிலையம்;
ஆகியவற்றின் மூலம் மக்கள் தேவையை நிறைவு செய்கின்றோம்.

மக்கள் தேவைக்கு எமது சங்கத்தை நாடுங்கள்:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இசைகள் நிறைந்ததும், தரத்தில் உயர்ந்ததுமான CASIO M. T. 520 ஓகன் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 40A, B. S. போட்டோ, இராஜேந்திரா வீதி, குருநகர். [சி-3601]

கடை விற்பனைக்கு

நல்லூரில் சகல வியாபாரமும் செய்வதற்கு ஏற்ற நல்ல சூழலில் அமைந்த புத்தம் புதிய தட்டைக் கூரை (Slab) உடையை கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [22954]

மொழி தேர்ச்சி ஆண்டு-5

புலமைப் பரிசில் பரீட்சையில் உச்சப் புள்ளி பெறத்தக்க வகையில், அனைத்து வகை வினாக்களுக்கும் 21 அலகுகளாக வகுக்கப்பட்டு, ஆக்கப் பெற்ற உன்னத நூல். ஆக்கம்: பண்டிதர் க.வேலுப்பிள்ளை, [சு வே.] வெளியீடு: ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [5383]

இலவச திருமண சேவை

28 வயது, பூசம், செவ்வாய் - 4,UKஇல் Electrical, Electronic Engineer வேலை செய்பவருக்கு தகுந்த மணமகள் தேவை; திருமணம் இலங்கையில். தொடர்பு; ஞாயிறுகாலையில் து.விமலா, யாழ்/நாச்சிமார் கோவிலடி. [22957]

49வயது, சித்திரை, படித்த, நற்குண மணப்பெண்ணுக்கு அரச, தனியார்துறை, வியாபார மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு! ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ்; நாச்சிமார் கோவிலடி. (22956)

ராகு, கேது மாற்றம்

30-10-1992 ராகு, கேது மாற்றமும், 04-11-1992 செவ்வாய் மாற்றமும் ரூபா 7-50. எங்கும் விற்பனையாகின்றன. தீபாவளி வெளியீடு: மக்மிலன், சோபிதா புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். நூலாசிரியர்: Prof. சத்தியதாஸன், கட்டுடை, மானிப்பாய் (5407)

மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு, மணமக்களும், வெளிநாட்டில் உள்ள பெண்களும், சைவ போசனர்களும் இருக்கிறார்கள். தொடர்பு சனி காலையில். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [22969]

கூட்டுறவு தின போட்டிகள்

யாழ். கோட்ட கூட்டுறவு தின விழாவை யொட்டிய போட்டிகள் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடைபெற உள்ளன.

நவம்பர் முதலாம் திகதி அங்கத்தவர்களுக்கான கட்டுரை, பேச்சு, வினாடி வினாப் போட்டிகளையும்—

நவம்பர் 8 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகளையும்—

நவம்பர் 9ஆம் திகதி நாடகப் போட்டிகளையும்— நடத்துவது என கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற யாழ். கோட்ட கூட்டுறவு தின விழாக் குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ளது. [இ]

முதலாவது

பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் ஜெரிஜோண்சன்

திரு. திருமதி அன்ரனி - மெடோனா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரன் செல்வன் ஜெரிஜோண்சன் இன்று (21-10-1992) முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

செல்வன் ஜெரிஜோண்சனை சகல கலைகளையும் கற்று, பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, யூட் அண்ணா, வின்ஸ் அண்ணா, அன்டன் அண்ணா, ஸ்டனி அண்ணா, அண்ணி மற்றும் இந்திரா மச்சான், ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

யூட்போட்டோ,
51, நாலாம் குறுக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். [சி-3500]

லக்ஸ்பிறே வெற்றுப் பக்கட் சேகரித்தல்

லக்ஸ்பிறே மஞ்சள்நிற 400கிறாம், 500கிறாம் வெற்றுப் பக்கட்

மொத்தமாகவும், கில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும், சேகரித்து விநியோகம் செய்யவிரும்புவோர், தொடர்பு கொள்ளவும்;

க. ஜெயபாலன்,
பொதுமுகாமையாளர்
யாழ். பகுதி தெங்கு ப; பொ; கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

870, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [22962]

கலை, வர்த்தகக் கல்லூரி
C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை

A/L புதிய பிரிவு

கணக்கியல்	திரு. ஸ்ரீ	8 — 9
பொருளியல்	திரு. உதயன்	9 — 10
வர்த்தகம்	திரு. இரட்ணம்	7 — 8 10 — 11
இந்து நாகரிகம்	திரு; ஜோதீஸ்வரன்	11 — 12
அளவையியல்	திரு; சயந்தன்	1 — 2
தமிழ்	திரு. தங்கராசா	8 — 9
புவியியல்	திரு. வேலாயுதபிள்ளை	12 — 1
அரசியல்	திரு; பஞ்சு	7 — 8
கிறிஸ்தவ நாகரிகம்	செல்வி சாந்தி	11 — 12

ஆரம்பம்: 31 — 10 — 1992

குறிப்பு: 1. முன்கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
2; பிரிவு I க்குரிய அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
3. பிரிவு II புதிய அலகில் இருந்து ஆரம்பமாகும்.

விவரங்களுக்கு நேரில்.

[சி-3706] - நிர்வாகி.

தீபாவளியை முன்னிட்டு

சீமாட்டி

★ மலிவு விற்பனை ★

★ சைனா சீத்தை
★ தாறிகா வோயில் சாறி வகைகள்
★ உறையூர் சேலைகள் [சுத்தமான பருத்தி]
★ புதிய டிசைன் சாறி வகைகள்
★ பேபி சூட்டுகள்
★ ஒறிஜினல் கிப்ஸ் மார்க் சாரங்கள்
★ பெனியன்கள், ஏனைய
★ கிப்ஸ் தயாரிப்புச் சார வகைகள்
★ சேட் வகைகள் [டாம் டாம், ஜோன் கூப்பர், மாட்டின்]

மற்றும் அனைத்து தீபாவளித் தேவைகளுக்கும் இன்றே நாடுங்கள்:

சீமாட்டி ஜவுளி சமுத்திரம்,
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3708]

வடமராட்சி

மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை

★ G. A. Q. ; 1st. in Com.
★ B. A. Part - I; B. Com. Part - I

மேற்படி கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன;

பொருளியல்	—	எஸ். வரதராஜன் B. A. (Hons.)
கணக்கியல்	—	பவான் B. B. A. (Hons.)
வர்த்தகம்	—	பகில் B. B. A. (Hons.)
தமிழ்	—	நடராஜா M. A.
இந்து நாகரிகம்	—	குமுதினி B. A. (Hons.)
அரசியல்	—	மார்க்கண்டு B. A.

ஆரம்பம்: 26 - 10 - 1992
திங்கள் 4-00 p. m.

யங்றோயல்

நெல்லியடி.

[சி-3710]

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:	மறைவு:
21	21
—	—
04	10
—	—
1940	1987

சூ. அந்தோனிப்பிள்ளை சேனாதிராசா

பாசமாய் எமை வளர்த்த
நேசமுள்ள தந்தையாரே!
ஈசனடி சேர்ந்தீரோ
எமை விட்டு
ஆசையாய் நாம் எல்லோரும்
அப்பா என்றழைத்து
நேசமாய் இருந்தோமே
எம்மைப் பரதவிக்க விட்டீர்களே!

உமது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்.

38, பீச் றோட்,
குருநகர். [5394]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

உதயன்

அர்த்தமற்ற விஜயம்

வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும், பொருளாதாரக் கஷ்டங்களையும் தமது வவுனியா விஜயத்தின் மூலம் கெரிந்து கொள்ள முடிந்ததாக பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் பொய்ட் கூறியிருக்கிறார்.

அகதிகளின் நிலைமையை, குறிப்பாக இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ள அகதிகளின் நிலைமையை, அவர்கள் பராமரிக்கப்படும் விதத்தை நேரில் பார்ப்பதற்காகவே பிரிட்டிஷ் அமைச்சர் வவுனியா வருவார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அகதிகள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதாகத் திருப்தி அடைந்தால், பிரிட்டனிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை இங்கு திருப்பி அனுப்புவதற்கு பிரிட்டிஷ் அமைச்சர் சிபார்சு செய்யக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் திரு. மார்க் பொய்ட், அகதிகள் தக்க முறையில் பராமரிக்கப்படுகிறார்களா? அவர்கள் பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலை உண்டா? அகதிகளுக்கு உரிய மறுவாழ்வு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா? அவர்கள் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதற்கு உள்ள தடங்கல்கள் என்ன?— என்பவற்றை அவர் அவதானித்திருப்பார் என நம்பலாம்.

எனினும் இது ஓர் ஏற்பாடு செய்யப்பட்ட விஜயம் ஆதலால் அவர் அரசாங்க அதிகாரிகள் வெளிப்படுத்திய— பெரிதுபடுத்திக் காட்டிய அரசுக்குச் சாதகமான, சார்பான அம்சங்களையே அதிகமாக கிரகித்திருப்பார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உண்மையான நிலையை அவர்களின் வாழ்க்கை அவலங்களை, மன உளைச்சல்களைத் கேட்பதற்கு அவருக்குப் போதிய வாய்ப்புக் கிடைத்திருக்குமா, வசதி செய்யப்பட்டிருக்குமா என்பது சந்தேகமே!

அமைச்சர் யுத்தத்தினால் உண்டாகியிருக்கும் உண்மையான பாதிப்புகளை, தாக்கங்களை அறிய விரும்பி இருந்தால், அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத யுத்தப் பிரதேசங்களுக்கு அவர் வந்திருக்க வேண்டும். குறிப்பாகக் கூறுவதானால் யாழ்ப்பாணத்திற்கு வந்து பார்த்திருக்க வேண்டும்.

அப்போது தான், யுத்தம் ஈழத் தமிழ் மக்களை எந்தளவுக்குப் பாதித்துள்ளது, அவர்களின் வாழ்க்கையைச் சீரழித்துள்ளது, அவர்களது வாழ்க்கை எவ்வாறு நூறாண்டுகளுக்குப் பிந்திய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்ற உண்மை நிலைகளை சரியாக அவதானித்திருக்க முடியும்.

எனவே அமைச்சரின் வவுனியா விஜயம் அரைகுறையான விடயமறியும் விஜயமாகவே கருதப்பட வேண்டும். அவர் வெளியிடும் கருத்து அல்லது சமர்ப்பிக்கும் அறிக்கை எதுவும் சரியான நிலையை உணர்த்துவதாக அமையமாட்டாது.

மேலும், தான் நிறுத்தி வைத்த இராணுவ உதவியை மீள வழங்கப்போகும் பிரிட்டன், யுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைப் பார்ப்பதில் அறிவதில் என்ன பயன்? எனவே அமைச்சரின் வவுனியா விஜயம் அர்த்தமற்றது.

கிளிநொச்சி பால் தொழிற்சாலை இயந்திரங்கள் கொழும்பு வந்தன

எடுத்து வர அனுமதி தேவை

யாழ்ப்பாணம், அக் 21

கிளிநொச்சி விவசாய பீடத்தின் ஆதரவில் கிளிநொச்சியில் அமைக்கப்படும் பால் பதனிடும் தொழிற்சாலைக்கான இயந்திரங்கள் இந்தியாவில் இருந்து கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்களின் பெறுமதி சுமார் ஆறு லட்சம் ரூபா ஆகும்.

இந்த இயந்திரங்களை வாகனம் மூலம் கிளிநொச்சிக்கு எடுத்துவர கூட்டுப் படைத் தலைமையகத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

பால் கறக்கும் இயந்திரம், பாலில் இருந்து வெண்ணெய்யை வேறாக்கும் இயந்திரம், பட்டர் தயாரிக்கும் இயந்திரம், ஆகியவையே தற்போது இந்தியாவில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்துள்ளன.

மாடுகளில் இருந்து பால் கறக்கும் இயந்திரம் முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒரே நேரத்தில் இருமாடுகளில் இருந்து பால் கறக்க முடியும்.

இந்த இயந்திரத்தின் பெறுமதி மட்டும் ஒன்றரை லட்சம் ரூபா ஆகும். [இ-3]

சந்திரிகாவை எம். பியாக்க சிறிமாவோ முயற்சி

கொழும்பு, அக். 21

சுதந்திரக்கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியானவர்களை பதவி விலகும்படி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அணி நிர்ப்பந்தித்து வருவதாகவும்—

அவர்களைப் பதவி விலக வேண்டாம் என்று அனுரா அணி வற்புறுத்தி வருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

தேசியப் பட்டியல் எம்.பிக்களை பதவி விலகச் செய்வதன் மூலம் ஏற்படும் வெற்றிடங்களில் ஒன்றுக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை நியமிக்க சிறிமாவோ முயற்சித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரிகா தேசிய பட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்கப்படுவதை அனுரா அணியினர் விரும்பவில்லை என்றும்—

அதன் காரணமாகவே தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. யானவர்களை பதவி விலக வேண்டாம் என்று அனுரா அணி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலன்னறுவைச் சம்பவம்:

ஐ.தே.க. முஸ்லிம் எம்.பிக்கள் நாடாளுமன்றில் பேச முடிவு

கொழும்பு, அக். 21

பொலன்னறுவை முஸ்லிம் கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ள முஸ்லிம் எம்.பிக்கள் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்காவைச் சந்தித்து விரிவாக ஆராயவிருக்கின்றனர்.

பொலன்னறுவைப் படுகொலை குறித்து நாளை 22ஆம் திகதி நாடாளுமன்றத்திலும் அரச முஸ்லிம் எம்.பிக்கள் பேச முடிவு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

ஆளும் கட்சியில் உள்ள முஸ்லிம் எம். பிக்களை பதவி விலகக் கோரிக்கை

கொழும்பு, அக். 21

பொலன்னறுவைப் படுகொலையைக் கண்டித்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும்.

சுதந்திரக்கட்சியில் உள்ள ஹெல உறுமய அணி இணைச் செயலாளர் திலக் கருணாரத்னா இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிய இந்த அரசாங்கத்துக்கு தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாண எல்லைப்புற சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு 303 ரக ரைபிள்கள்

கிழக்கு மாகாணத்தின் எல்லைப்புறச் சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு 'ஷொட்கன்'களுக்குப் பதில் 303ரக ரைபிள்கள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த பாதுகாப்பு வலயங்களைப் படையினர் ஏற்படுத்தியுள்ளனர் என்றும்—

இக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு ஆயுதப்பயிற்சியுடன் 303ரக ரைபிள்களும் வழங்கப்படும் என்றும் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் 'லங்காபுவத்'துக்கு தெரிவித்தன.

இத்தகவலை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. [ஒ-எ]

இலவசக் கல்வி நிலையம் திறப்பு

இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி வசதியை முன்னிட்டு வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் இன்று புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு இலவசக் கல்வி நிலையம் ஒன்றை யாழ். மகாத்மா காந்தி வீதியில் ஆரம்பிக்க இருக்கின்றது.

யாழ். வட்டவை பொறுப்பாளர் திரு. இளங்கோ சம்பிரதாய முறைப்படி கல்வி நிலையத்தை ஆரம்பித்து வைப்பார். [ஒ]

குழாய் நீர் விநியோகம்

இன்று 21ஆம் திகதி நவாலி மகாவித்தியாலயத்திலும்—

24ஆம் திகதி நவாலி சென்ற்பீட்டர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும் குழாய் நீர் விநியோகம், வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது. [இ-90]

வெளியூர் தபால்கள்

யாழ்ப்பாணம், அக். 21

வெளியூர் தபால்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பாக தபால் நிலையங்களில் சேர்க்குமாறு வடமாகாண பிரதி தபால்மா அதிபர் திரு. எஸ். எம். சேதுகாவலர் கோரியுள்ளார்.

இவ்வார இறுதிக்குள் கொழும்பு செல்லவிருக்கும் குமாரி கப்பலில் வெளியூர் தபால்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

ஜேர்மன் அரசு அறிவிப்பு:

அகதிகளுக்கு உதவிப்பணம் 25 வீதம் குறைக்கப்படும்

பெர்லின், அக். 21

ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டு அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பணத்தை 25 சத வீதத்தினால் குறைக்கப் போவதாக ஜேர்மன் அரசாங்கம் அறிவித்துள்ளது

தஞ்சம் கோரியுள்ள வெளிநாட்டு அகதிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவை தொடர்பாக மேற்கொண்டு முடிவு எடுக்கப்படும் வரை அகதிகளுக்குவழங்கப்படும் உதவிப் பணத்தை 25 சத வீதத்தினால் குறைக்கப் போவதாக ஜேர்மன் அரசு கடந்த வாரம் அறிவித்தது.

தஞ்சம் கோரி ஜேர்மனிக்கு வெளிநாட்டார் வருவதை குறைக்குமுகமாகவே இந்தக் கடும் நடவடிக்கையை ஜேர்மன் அரசு எடுத்துள்ளது.

மோப்ப நாய்களால் பொதிகள் சோதனை

கொழும்பு, அக். 21

பயணிகளின் பொதிகளை மோப்ப நாய்கள் சோதனையிடுகின்றன.

அம்பாறையில் இருந்து உகனை வழியாக கண்டி— கொழும்பு ஆகிய இடங்களுக்கு பயணம் செய்வோருக்கு உகனைக்கும் அரந்த தலாவைக்கும் இடையில் இந்த அவலம் ஏற்படுகிறது.

சகல வாகனங்களும் இத்தடை முகாமில் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் அனைவரும் இறக்கப்படுகின்றனர்.

பின்னர் மோப்ப நாய்கள் வாகனங்களுக்குள் ஏறி பயணிகளின் பொதிகளை மோப்பமிடுகின்றனவாம்.

நாய்கள் மூலம் தமது பொதிகள் மோப்பமிடப்படுவதற்கு பயணிகள் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும்—

உணவுப் பொருள்களைக் கொண்டு வருவோர் மோப்ப நாய்களின் சோதனையின் பின்னர் தமது உணவுப் பொருள்களை எறிந்து விடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

புதிய சம்பளத் திட்டம்

தென்மராட்சி, அக். 21

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் மருத்துவ தாதிகளுக்கான புதிய சம்பளத் திட்டம் உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழுவினால் சுற்றறிக்கை மூலம் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. [த-117]

விழிப்புலனற்றோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முயலவேண்டும்

வெள்ளைப் பிரம்பு தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், அக். 21

விழிப்புலனற்றோரின் கல்வி மற்றவர்களின் கல்வியுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அதே சமயம் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற நாம் அனைவரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச வெள்ளைப் பிரம்புதின விழாவில் உரை நிகழ்த்திய சமூக சேவைப் பணிப்பாளர் கமலா சிவகிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பரியோவான் கல்லூரியின் ஜூபிலி மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று இவ்விழா நடைபெற்றது.

யாழ். லயன்ஸ் கழக ஆதரவுடன் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்திய இவ்விழாவில் சமூக சேவைப் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில், விழிப்புலன் அற்றோருக்கான இவ் வெள்ளைப் பிரம்பு தினத்தை கொண்டாடும் நாம் விழாவைக் கொண்டாடுவதுடன் மாத்திரம் நின்றுவிடாது அவர்களின் தேவைகளையும் நிறைவேற்ற முயல வேண்டும் — என்றார்.

கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. கோபாலகிருஷ்ணன் உரையாற்றுகையில், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் விழிப்புலனற்றோரில் தற்போது ஆயிரம் பேரில் நான்கு பேர் மாத்திரமே நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். தாழ்வு மனப்பான்மையே இதற்கான காரணம் ஆகும். இதனை நாம் மாற்றி அமைக்க வேண்டும்- என்றார்.

வலயத் தலைவர் திரு. இராமகிருஷ்ணன், விழிப்புலனற்றோர் சங்க உதவிச் செயலாளர் திரு. பரமேஸ்வரன். நற்சமூக நடுநிலையச் செயலாளர் திரு. சந்தியாப்பிள்ளை, விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் திரு. ரவீந்திரன், லயன்ஸ் உறுப்பினர் திரு. யுகபாலசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

வைபவத்தின்போது விழிப்புலனற்ற எண்மருக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்பட்டன.

விழிப்புலனற்றோருக்கு உதவும் வகையில் திருமதி சிவப்பிரகாசம் ஒரு தொகைப் பணத்தை தலைவர் ரவீந்திரனிடம் வழங்கினார். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெ. ஜனாதிபதித் தேர்தல்

பகிரங்க விவாதத்தில் கோட்டை விட்டார் புஷ்!

மக்கள் ஆதரவும் குறைகிறது

வாஷிங்டன், அக். 21

அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்பில் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ் புஷ் மிகவும் பின்தங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளின்டன், சுயேச்சை வேட்பாளர் றொஸ் பெறோ ஆகிய இருவரும் முன்னணியில் இருக்கின்றனர்.

மூன்று வேட்பாளர்களும் ஒரே மேடையில் தொலைக்காட்சி விவாதத்தில் நேற்று பங்குபற்றினர்.

இழந்து வரும் செல்வாக்கை மீட்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் இந்த தொலைக்காட்சி விவாதம் என்றும் —

ஆனால் புஷ் அதைக் கோட்டை விட்டுவிட்டார் என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இந்த விவாதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் போது—

பில் கிளின்டனுக்கு 39 வீத ஆதரவும் சுயேட்சை வேட்பாளர் றொஸ் பெறோவுக்கு 25 சத வீத ஆதரவும், ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 19 வீத ஆதரவும் இருப்பது தெரிய வந்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (உ-எ-10)

பல்கலை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஆனால் —

அரசு முஸ்லிம்களுக்கு அதிக பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதற்காகவும் —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் தாம் இது போன்ற ஆர்ப்பட்டத்தை நடத்தியதாக மாணவர் குழுத்தலைவர் அன்வர் இஸ்மாயில் கூறினார்.

இதேவேளை —

பொலன்னறுவை படுகொலை சம்பவமானது இலங்கை அரசால் பழிவாங்கும் நோக்கில் மிகவும் கவனத்துடன் செயற்படுத்தப்பட்ட ஒன்று என விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் அறிவித்துள்ளது என கொழும்பில் ஏ. பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. (உ-எ-10)

அடிப்படை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டவை சாதனை படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண்டு தோறும் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ 1985	—	26
★ 1986	—	90
★ 1987	—	93
★ 1988	—	108
★ 1989	—	49
★ 1990	—	79
★ 1991	—	192
★ 1992 (அக்டோபர் 16 ஆம் திகதி வரை)	—	801

(உ-எ)

"குமண" வந்தது

யாழ்ப்பாணம், அக். 21

நேற்று நண்பகல் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த "குமண" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின. மருந்து வகைகள், எரிபொருள் வகைகள் நேற்று முதலில் இறக்கப்பட்டன. (உ-3-165)

"கறுப்பு வெள்ளி"...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்படுகின்றது.

'கறுப்பு வெள்ளி' தினத்தன்று—

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் தமது வீடுகள் மற்றும் வாகனங்களில் கறுப்புக் கொடிகளை பறக்கவிடுமாறு கோருவது என்றும்—

மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பவேண்டாம் என்று பெற்றோர்களை கேட்டுக்கொள்வது என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. (உ-எ)

தொண்டர் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், அக். 21

நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் இன்று அல்லது நாளை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை நல்லூரில் உள்ள இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் தமது மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரமளவில் கல்விச் சேவைச் சபைத் தலைவர் திரு. ஜோர்ஜ் மென்டிஸிடம் மேன்முறையீட்டைச் சமர்ப்பித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்படி சங்கம் வலியுறுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

மன்னார் ஆயர் திருநிலைப்படுத்தல்

கொழும்பு, அக். 21

மன்னார் மறைவட்டத்தின் புதிய ஆயராக அருட்திரு ராயப்பு ஞானாநந்தர் யோசப் அடிகளை திருநிலைப்படுத்தும் சடங்கு நேற்று மடுத்திருப்பதியில் நடத்தப்பட்டது. (உ-எ)

எல்லைப்புற .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மற்றும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் செயற்படவேண்டும்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காணும் முயற்சியில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஈடுபட்டுள்ளது. தெரிவுக்குழு இது தொடர்பான தனது நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். — என்றார். (உ-எ-10)

வயிற்றோட்டம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. பிந்திய தகவல்களின் பிரகாரம் மொத்தம் 22 குழந்தைகள் வயிற்றோட்ட நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளாலியைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தை ஒன்று இம்மாதம் 18 ஆம் திகதியும், இத்தாவிலில் இன்னொரு குழந்தை 20 ஆம் திகதியும் வயிற்றோட்டத்தால் இறந்தன. (த-15-117)

உள்ளூராட்சி ஆளணிக் குழு வவுனியாவில் 24 இல் கூடும்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் அடங்கும் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேவையான ஆளணி வலுவை மீளாய்வு செய்யும் குழு எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் கூடவுள்ளது.

உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் பலர் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்ததால் பல உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

மேலும் அனுபவம் உள்ள உள்ளூரரட்சி ஊழியர் சுயவிருப்பின்படி ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட வெற்றிடங்களும் இன்னும் நிரப்பப்படவில்லை.

இத்தகைய பின்னணியில் உள்ளூராட்சி சேவையாளருக்கான ஆளணி வலுவை புதிதாக நிர்ணயிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளும், தொழிற்சங்கங்களும் ஆளணி வலு மீளாய்வுக் குழுவிடம் தமது தேவைகளையும் கிபார்சுகளையும் தெரிவிக்க முடியும். (அ-126)

2,000 பேருக்கு எயிட்ஸ்

கொழும்பு, அக். 21

நாட்டில் 47 எய்ட்ஸ் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் நாட்டில் தற்போது சுமார் 2 ஆயிரம் எய்ட்ஸ் நோயாளர்கள் இருக்கலாம் என்று கருதப்படுவதாக அமைச்சு வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் இத்தொகை மும்மடங்காக அதிகரிக்கலாமென அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்ததாகவும் அச் செய்தியில் கூறப்பட்டது. (உ-10)

இராணுவ அதிகாரி வீட்டில் புதைக்கப்பட்டிருந்த ரி-56!

கொழும்பு, அக். 21

மினுவாங்கொடைப் பகுதியில் இராணுவ பொலீஸ் அதிகாரி ஒருவரின் வீட்டில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் 105 ரவைகளையும் மினுவாங்கொடை பொலீஸார் கைப்பற்றினர்.

சம்பந்தப்பட்ட இராணுவப் பொலீஸ் அதிகாரி அனுராதபுரம் இராணுவ முகாமில் பணி புரிந்து வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது வீட்டைச் சோதனையிட்ட பொலீஸார் இராணுவப் பொலீஸுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கண்டு பிடித்தனராம். (ஒ-எ)

நேபாளத்திலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைத் நடத்தினார்.

இரு பிரதமர்களும் முதலில் உதவியாளர்கள் இன்றி தனித்து சுமார் 40 நிமிட நேரம் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சை அடுத்து இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கவலை குறித்து கருத்து உடன்பாடு ஒன்று காணப்பட்டதாகவும்—

தீவிரவாதிகள், இந்தியாவுக்கு எதிரான தமது நடவடிக்கைகளுக்கு நேபாளத்தை ஒரு தளமாகப் பயன்படுத்த இரு நாடுகளும் அனுமதிப்பதில்லை என்று கூட்டறிவிப்பு வெளியிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

அச்சுவேலி...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

விசேட கலை நிகழ்ச்சியாக சந்தனக்காடு கலைஞர்கள் வழங்கும் "இரட்டை முகங்கள்" நாடகம் மேடையேற்றப்படும். (அ-11)

கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 21

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாய, சூழல் பாதுகாப்புப் பகுதி பல்வேறு மட்டங்களில் நடத்திவரும் சூழல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குத் தொடரில் இன்று யாழ். மத்திய கல்லூரியிலும், நாளை அரியாலை பாரதி வித்தியாசாலையிலும் காலை 9 மணிக்கு கருத்தரங்கு நடைபெறும்.

நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நேற்று முன்தினம் கனகரத்தினம் ம. ம. வியிலும் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. (உ)

தீபாவளி மலிவு விற்பனை

இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

கொட்டன் சீத்தை	36"	மீட்.	42-50
ஹைபிறைற் பொலிஷ்ரர் பிரிண்டட்	36"	"	40-00
பொலிஷ்ரர் பிரிண்டட்	36"	"	50-00
ரெற்றோன் கொட்டன் பிரிண்டட்	44"	"	70 00
ரெற்றோன் கொட்டன் பிரிண்டட்	44"	"	125-00
விஸ்கோஸ் பிரிண்டட்	44"	"	100-00
பொலிஷ்ரர் சாரம்			105-00
கொட்டன் பிஜாமா சாரம்			125-00
டெனிம் கவுண்			275-00
டெனிம் பெல்ஸ் (சிறுவர்)			140 00
டெனிம் சோட்ஸ் (சிறுவர்)			100-00
ஜோன் கொப்பர் சேட் வெள்ளை L/S			290-00
பத்திக் மக்ஸி			210-00

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மலிவு விலையில் புடைவைகளை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

த. குமாரசாமி ரெக்ஸ்ரயில்ஸ்

(பாரதியார் கிலைக்கு அருகாமையில்)

156, பருத்தித்துறை வீதி, நல்லூர். (22973)

மரண அறிவித்தல்

திருமதி அன்னலெட்சுமி செல்வராசா

(எழுதுவினைஞர், தொழிற்கந்தோர், யாழ்ப்பாணம்)

திருமதி அன்னலெட்சுமி செல்வராசா 19-10-92 அன்று காலமானார். இவர் செல்வராசாவின் அன்பு மனைவியும், பிரதீபன், கதிர்காமநாதன், தயாளினி, ரிசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை, காலஞ்சென்ற திருமதி நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும், கோபாலகிருஷ்ணன், இராசலெட்சுமி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவரது தகனக்கிரியைகள் இன்று 21-10-92 காலை 10-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ. செல்வராசா

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (22976)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org